வானவில் கலையகம்
உங்கள் இல்லத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் எதுவானாலும் சிறந்த முறையில் HD தொழில் நுட்பத்தில் போட்டோ பிடித்து நவீன தொழில்நுட்பத்தில் செய்து பெற்றுக்கொள்வதற்கும் –
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் Internet மூலம் உங்கள் நிகழ்வுகளை அதி உயர்தரத்தில் நேரடியாக Online Videoவில் பார்த்து மகிழ்ந்திடவும் –
இன்றே நாடுங்கள்
வானவில் கலையகம்
330, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
www.vanavilstudio.com
T.P.: 021 222 9466, 0772487550

10/=
பக்கங்கள் 06
எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 56 செவ்வாய்க்கிழமை ஜூலை 04 2017 ethirolimedia@gmail. ... 48 48



# கலவரத்துக்கு பொலிஸே காரணம்!

## நீதிமன்று எச்சரிக்கை


பொலிஸாரின் மோசமான செயற்பாட்டின் காரணமாகவே வித்தியா படுகொலையின் பின்னர் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டங்களையும், நீதிமன்றம் மீது தாக்குதலையும் மேற்கொண்டனர் எனக் குறிப்பிட்டுள்ள ட்ரயல் அட்பார் நீதிமன்று, குறித்த காலப்பகுதியில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிகாரியையும் கடுமையாக எச்சரித்துள்ளது.

வித்தியா கொலை வழக்கின் 5ஆம் நாள் விசாரணைகள் இன்று நடைபெற்றன. சம்பவ காலத்தில் குணால் பெரேரா என்பவரே ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருந்துள்ளார். அவர் இன்று 19 ஆவது சாட்சியாக சாட்சியமளித்துள்ளார். அவர் சாட்சியமளித்த பின்னர் நீதிபதிகள்


06



ரோகித போகல்லாகம
கிழக்கு ஆளுநர்



கபில வைத்தியரத்ன
பாதுகாப்புச் செயலர்



ஒஸ்ரின் பெர்னாண்டோ
ஜனாதிபதி செயலர்



மகேஸ் சேனநாயக்க
இராணுவத்தளபதி

# அதிரடி மாற்றங்கள்

கிழக்கு மாகாண ஆளுநர், இராணுவத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஜனாதிபதியின் செயலாளர் ஆகிய முக்கிய நான்கு பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று அதிரடியாக அறிவித்துள்ளார். நால்வருக்குமான பதவியேற்பு மற்றும் நியமனக் கடிதங்கள் வழங்கல் நிகழ்வு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இன்று காலை நடைபெற்றுள்ளது. இதன்போது இவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி வழங்கியுள்ளார். கிழக்கு மாகா ணத்தின் ஆளுநராக முன்னாள் அமைச்சர் ரோஹித்த போகல்லாகமவும் இலங்கை யின் புதிய இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவும் பதவியேற்றுள்ளார். பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக முன்னாள் மேலதிக சொலிஸ்ரர் ஜெனரலான கபில வைத்திய ரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை கிழக்கு மாகாணத்தின் ஆளுநராகப் பதவி வகித்த ஒஸ்ரின் பெர்ணான்டோ ஜனாதிபதியின் புதிய செயலாளராகப் பதவியேற்றுள்ளார். (எ)

# புலி அச்சம் இல்லை

விடுதலைப் புலிகள் மீண்டும் எழுச்சி பெறக் கூடிய அச்சுறுத்தல் கிடையாது என்று இலங்கை இராணுவத்தின் யாழ். படைகளின் தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் தர்ஷண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். மயிலிட்டிப் பிரதேசம் விடுவிக்கப்பட்டமை தொடர்பாக இந்திய ஆங்கில ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். 'பாதுகாப்பு நிலைமைகள், அரசாங்கத்தின் நல்லிணக்க

06

# கூட்டு எதிர்க்கட்சி வெளியேறுகின்றது

அரசியல் சாசன சபையிலிருந்து கூட்டு எதிர்க்கட்சி விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளது. தேர்தல்களை அரசாங்கம் தொடர்ந்தும் ஒத்தி வைக்கின்ற காரணத்தினால் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டு வருவதனால் அரசியல் சாசன சபையில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதில் எவ்வித பயனும் கிடையாது என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.பி. ரட்நாயக்க தெரிவித்துள்ளார். அரசியல் சாசன சபையிலிருந்து விலகிக் கொள்வது குறித்து இன்று நடைபெறவுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் குழுக் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


06

# கனகராயன்குளத்தில் மோட்டார் குண்டுகள் மீட்பு

வவுனியா வடக்கு கனகராயன்குளம் பகுதியில் காட்டுக்குள் இருந்து வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டுகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

கனகராயன்குளம் - மன்னகுளம் பகுதியிலுள்ள காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டுவதற்காக சென்றவர்கள் இன்று காலை வெடிக்காத நிலையிலிருந்த 4 மோட்டார் குண்டுகளை அவதானித்துள்ளனர்.

இதையடுத்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் அப் பகுதியில் தேடுதல் மேற்கொண்டனர். தேடுதலில் பின்னர் அப் பகு தியில் மோட்டார் குண்டு கள் அதிகம் இருப்பதாகவும் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று அகழ்வுப் பணியை மேற்கொள்ள விருப்பதாகவும் கூறியுள்ளனர். (எ)





# கொடிகாமத்தில் ஆர்ப்பாட்டம்!

யாழ்.கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை முன்பாக பிரதேச மக்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த வைத்தியசாலையில் நிரந்த வைத்தியர்கள் மற்றும் நோயாளர் காவு வண்டி ஆகியவை இல்லாமையைக் கண்டித்தும், கடந்த வாரம் விபத்தில் காயமடைந்த ஒருவருக்கு சிகிச்சையளிக்கப்படாமையால் உயிரிழந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பிரதேச மக்கள் இன்று

06

# நெடுந்தீவுக் குதிரைகள் தாகத்தால் உயிரிழப்பு

யாழ். நெடுந்தீவு பகுதியில் கடுமையான வறட்சி காரணமாகவும், உரிய பராமரிப்பு இன்றியும் குதிரைகள் உயிரிழந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையில், குதிரைகள் வசிக்கும் இடமாக நெடுந்தீவே உள்ளது. ஆயினும் தற்போது நிலவும் கடுமையான வறட்சியால் நெடுந்தீவில் உள்ள நீர்நிலைகள் காய்ந்து போய் விட்டன. இதனால் தாகத்தால் இதுவரை 10 குதிரைகள் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குதிரைகளின் உயிரிழப்பு தொடர்பில், நெடுந்தீவு

06





# வெள்ளவத்தைக் கடலில் படகு கவிழ்ந்து அனர்த்தம்!

**மூவரை காணோம்**

வெள்ளவத்தைக் கடற் பரப்பில் மீன்பிடிப் படகு ஒன்று இன்று காலை 10 மணியளவில் விபத்துக் குள்ளானது.

இந்த நிலையில், குறித்த படகில் இருந்த இருவர் பாதுகாப்பாக மீட்கப் பட்டுள்ளதாகவும், படகில் இருந்த மூவர் காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். காணாமல் போனவர்களைத் தேடும் பணி தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஆ)

# வாக்குகளைப் பயன்படுத்தினால் வள்ளத்தில் போகத் தேவையில்லை



வாக்குகள் மூலம் சரியான தலைவர்களை உருவாக்கினால் நாம் வள்ளம் மூலம் அவுஸ்திரேலியா செல்லத் தேவையில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

18 வயதான ஒவ்வொருவரும் தமது உரிமையை பெற்றுக் கொள்ளவேண்டும். கட்டாயமாகக்கிடைக்கின்ற மரணத்தினை நாம் விரும்புவதில்லை. ஆனால் வாக்கினை விரும்புகிறோம். தேர்தல் நடைபெறவில்லை என்று மக்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு பேசுகின்றனர். ஆனால் தேர்தலை நடத்துகின்ற அதிகாரம் மாத்திரமே எம்மிடமுள்ளது. அதற்கான அனுமதி , அதிகாரங்களைப் பாராளுமன்றம் தான் தரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் நடைபெற்ற மக்களை விழிப்பூட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (உ)

# கிளிநொச்சி விபத்து: மூவர் படுகாயம்



கிளிநொச்சி ஏ.9 வீதியின் அன்னை இல்லச் சந்தியில் இன்று காலை இடம் பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந் துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து ஒரே திசையில் இரு மோட்டார் சைக்கிள்கள் சென்று கொண்டிருந்தன. இந்த நிலையில் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிள் கிளை வீதிக்கு திரும்ப முற்பட்டது. அந்த சைக்கிளுடன் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள்கள் மோதியுள்ளன.

இதன்போது பாடசாலை மாணவர்கள் உட்பட மூவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ)

# ஆறு கட்சிகளுக்கு அங்கீகாரம்

ஆறு புதிய கட்சிகள் அரசியல் கட்சிகளாக ஏற்றுக்கொள்ளப்பட உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய தற்போது 64 ஆக உள்ள அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்துள்ளன. அரசியல் கட்சிகளாகத் தம்மை பதிவு செய்யக்கோரி பல்வேறு கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் விண்ணப்பித்திருந்தன. அவற்றுள் ஆறு கட்சிகள் அரசியல் கட்சிகளாக ஏற்றுக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# தடை

கடந்த 6 மாதங்களில் இலங்கையில் 67 வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்கள் கறுப்பு பட்டியலில் இணைக்கப் பட்டுள்ளன.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணிமனை இதனைத் தெரிவித்துள்ளது. சட்ட விரோதமான செயற்பாடுகள் மற்றும் மோசடிகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைபாடுகள் மற்றும் அதன் அடிப்படையிலான விசாரணைகளை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது 702 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் செயற்படுகின்றன. பல முகவர் நிறுவனங்கள் வெளிநாடுகளில் தரகுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு, இலங்கையில் இருந்து பலரை தொழில்வாய்ப்புகளுக்கு அனுப்புவதாக கூறி பண மோசடியில் ஈடுபடுபவையாக உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)



# சந்திப்பு

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருடன் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும் இலங்கை ஆசிரியர் சங்கமும் கூட்டாக சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டன.

கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற இச் சந்திப்பில் வவுனியா மாவட்ட கல்விச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலைகளில் நிலவும் ஊழல் செயற்பாடுகள், முறையற்ற நியமனங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இச் சந்திப்புக் குறித்து கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் குறிப்பிட்டபோது, நிர் வாகச் சட்டங்களுக்கு அமைவாக முறையற்ற நியமனங்களை இடைநிறுத்துவதாகவும் தன்னால் இயன்றளவு கல்விச் செயற்பாடு களில் அரசியல் தலையீடு இல்லாமல் இருப் பதற்குரிய நடவடிக்கைகளை விரைவாக வட- மாகாண முதலமைச்சருடன் இணைந்து நல்லதொரு பதிலை பெற்றுத் தருவதாகவும் கூறினார். (உ)

# கிராமங்களை நோக்கி டெங்கு ஒழிப்பு வைத்தியர்கள்

டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக விசேட வைத்தியக்குழு அனைத்து கிராமப்புற வைத்தியசாலை களிலும் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைகளில் நிலவும் டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பினை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் விசேட வைத்தியர் அமல் சில்வா தெரிவித்தார்.

டெங்கு நோயாளர்களை விரைவாக அடையாளம் காண்பதற்காக அனைத்து வைத்திய சாலைகளிலும் வெளிநோயாளர் பிரிவில் இரத்தப் பரிசோதனை செய்வதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டிருப் பதாக தெரிவித்த அவர் குறுகிய நேரத்திற்குள் இது தொடர்பான அறிக்கையைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் குறிப்பிட்டார். (உ)

# கடலில் தத்தளித்த நால்வர் மீட்பு

நிலாவெளிக் கடலில் குளித்துக் கொண்டிருந்த 4 பேர், நீரில் அடித்து செல்லப்பட்ட போது பொலிஸாரினால் காப்பாற்றப் பட்டுள்ளனர்.

நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கடற்பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியுடன் இந்த நபர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

21 முதல் 28 வயதுடையவர்களே அனர்த்தத்துக்கு முகம் கொடுத்துள்ளனர். குறித்த நான்கு பேரும் திருகோணமலையில் இருந்து சுற்றுலாப் பயணம் மேற்கொண்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது. (உ)

# நாளை மின் தடை

மின்மார்க்கங்களில் நடைபெறும் திருத்த வேலைகள் காரணமாக நாளை புதன் காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ். மாவட்டத்தில் பின்வரும் இடங்களில் மின்சாரம் தடைப் பட்டிருக்கும் என மின்சாரசபையினர் அறிவித்துள்ளனர்.

கம்பர்மலை, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக் கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி.

**மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்**

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

# பட்டதாரிகள் சந்திப்பு



வவுனியா மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தை நேற்று மாலை அமைச்சரது வவுனியா இணைப்பு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியதுடன் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர். இதன்போது வவுனியாவில் 399 பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி இருப்பதாகவும் தமது போராட்டம் 125 நாட்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை எந்தவிதத் தீர்வும் கிடைக்கவில்லையென்றும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ)

# பெண்ணாக மாறும் ஆண் மீன்கள்



சாக்கடையிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயனங்களால் நன்னீரில் உள்ள 20 சதவீத ஆண் மீன்களுக்கு பெண் மீன்களின் குணாதிசயங்கள் ஏற்படுவதாக பிரிட்டனில் நடத்திய அறிவியல் ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது. கருத்தடை மாத்திரைகளில் பயன்படுத்தப்படும் இரசாயனம் உட்பட இம்மாதிரியான 200 இரசாயனப் பொருட்களை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த இரசாயனங்களால் ஆண் மீன்கள், பெண் மீன்களின் குணாதிசயங்களைப் பெறுகின்றன.
எக்ஸீட்டர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சார்லஸ் டெய்லர் சில ஆண் மீன்கள் கர்ப்பமுறச் செய்ய முடியாத தன்மையைக் காட்டியதாகவும், சில ஆண் மீன்கள் வெற்றிகரமாக முட்டையிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.(இ)

# அவகாசம்!



தாம் விதித்துள்ள நிபந்தனைகளை கட்டார் அரசு ஏற்று கொள்வதற்கான கால அவகாசத்தை 48 மணி நேரத்துக்கு அரபு நாடுகள் நீடித்துள்ளன.
தீவிரவாதத்துக்கு கட்டார் ஆதரவு அளிப்பதாகக் குற்றஞ்சாட்டி அந்த நாட்டுடனான தூதரக உறவை சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், எகிப்து ஆகிய நாடுகள் அண்மையில் துண்டித்தன.
கட்டாரில் அமெரிக்காவின் மிகப்பெரிய விமானப்படைத் தளம் உள்ளது. எனவே சவுதி அரேபியாவுக்கும் கட்டாருக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்த அமெரிக்கா தீவிரமாக முயற்சி மேற்கொண்டு வருகிறது.
அந்த வகையில் அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் இருதரப்பு மூத்த அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் முகாமிட்டு பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். ஆனால் இதில் இதுவரை எந்த சுமுக முடிவும் எட்டப்படவில்லை. இந்தநிலையிலேயே தமது நிபந்தனைகள் வெளியிட்டு, அதனை கட்டார் அரசு ஏற்றுக் கொள்வதற்கான கால அவகாசத்தை இன்னும் 48 மணித்தியாலங்களுக்கு அரபுநாடுகள் நீடித்துள்ளன. அவ்வாறு நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகும் எனக் கூறப்படுகிறது.

# பேராபத்து
## சீனா எச்சரிக்கை

"வட கொரிய பிரச்சினைக்கு உலக நாடுகள் தீர்வு காணாவிட்டால் அது பேராபத்தாகப் போய்விடும்" என்று ஐநாவுக்கான சீனத் தூதர் கூறியுள்ளார்.
அமெரிக்க அதிபர் டிரம்ப் சீனா அதிபரி ஷீ ஜின்பிங் கிடம் தொலைபேசியில் அழைத்து வட கொரியாவின் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுத சோதனைகளின் ஆபத்து குறித்து பேசியதன் தொடர்ச்சியாக தூதர் லின் ஜியே இதைத் தெரிவித்துள்ளார்.
"தற்போதைய பதற்றம் உச்சத்தில் இருக்கிறது. சூழல் கை மீறிப்போகலாம்" என்று அவர் தெரிவித்தார். சீனா ஜூலை மாதத்தில் ஐ.நாவின் பாதுகாப்பு சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளது. இந்த விஷயத்தில் அமெரிக்காவும், தென்கொரியாவும் இராணுவ ஒத்திகைகளை நிறுத்த வேண்டும் எனவும், அதற்குப் பதிலாக வட கொரியா தனது ஆயுதச் சோதனைகளை நிறுத்த வேண்டும் என்றும் சீனா சமாதானம் பேசியது.
ஆனால் இதை அமெரிக்கா ஏற்கவில்லை. தவிர அமெரிக்கா, சீனாவின் சமாதான முயற்சி தோல்வியடைந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளது. (இ)

# நடுவீதியில் எரிந்த பஸ்: தீயில் கருகி 18 பேர் பலி



ஜேர்மனி நாட்டில் லொறி மீது மோதி பஸ் ஒன்று தீப்பற்றி எரிந்ததில் 18 பேர் பலியாகியுள்ளனர். 30 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
ஜேர்மனியின் பவேரியா மாகாணத்தில் உள்ளநெடுஞ்சாலை யில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. சுற்றுலா பஸ் ஒன்று நேற்றுப் பிற்பகல், குறித்த சாலையில் சென்றுகொண்டு இருந்த போது, எதிர்பாராதவிதமாக லொறி மீது மோதியதாகக் கூறப்படுகிறது. மோதிய வேகத்திலேயே பஸ் தீப்பற்றி எரிந்துள்ளது. பஸ்ஸூக்குள் இருந்த 30 பேர் படுகாயங்களுடன் வெளியே தப்பியுள்ளனர். ஆனால், எஞ்சிய 18 பேர் வெளியேற முடியவில்லை என்பதால் அவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)



## இஸ்ரேலுக்கு போன இந்தியப் பிரதமர்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 3 நாள் பயணமாக இன்று செவ்வாய்க் கிழமை இஸ்ரேலுக்குச் சென்றார்.
இந்தியாவுக்கும், இஸ்ரேலுக்கும் தூதரக உறவு ஏற்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டே இந்தப் பயணத்தை மோடி மேற்கொண்டுள்ளார்.
இஸ்ரேல் நாட்டுக்கு இந்தியப் பிரதமர் ஒருவர் செல்வது இதுவே முதல் முறை.
இரு நாடுகளுக்கு இடையே பல முக்கிய உறவுகளை உறுதிப் படுத்துவதற்கான வழிகள் குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன், மோடி பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவுள்ளார். (இ)

# புகைப்படமெடுத்தவரை பதம் பார்த்த மணமகன்



லெபனான் நாட்டில் மணமகன் ஒருவர் திருமண விழாக் கொண்டாட்டத்தின் போது இயந்திரத் துப்பாக்கியால் புகைப் படக்கலைஞர் மீது சூடு நடத்தியுள்ளார்.
லெபனான் நாட்டிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அங்குள்ள நபர் ஒருவர் தனது திருமண விழாவில் நண்பர்கள் உறவினர்கள் சூழ விருந்து ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். இந்த விருந்தின் போது, தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்த, பட்டாசுக்கு பதிலாக தனது இயந்திரத் துப்பாக்கியால் வானத்தை நோக்கி சரமாரியாகச் சுட்டார். ஆனால் அப்போது எதிர்பாராத விதமாக அவரது கையில் இருந்த துப்பாக்கி நழுவியது. அதனால் துப்பாக்கிச் சூடுகள், பக்கவாட்டாக படத்தொடங்கின.
விருந்துபாசார மேடை, உணவுகள் என்பவற்றில் பட்ட சூடுகள், கடைசியாக அங்கு படம் பிடித்துக் கொண்டிருந்த புகைப் படக்காரரையும் பதம் பார்த்தன. துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் புகைப் படக்காரர் உடனடியாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

# மெக்ரானைக் கொல்ல திட்டமிட்டவர் கைது

பிரான்ஸ் ஜனாதிபதியைக் கொல்லத் திட்டம் தீட்டிய இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
பிரான்ஸ் நாட்டின் தேசிய தினமான ஜூலை 14 ஆம் திகதி பரிஸில் மிகப் பிரமாண்டமான ஊர்வல நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் புதிய ஜனாதிபதியான இம்மானுவேல் மெக்ரனும் பங்கேற் கிறார்.இதன்போதே அவரைக் கொல்ல இளைஞர் ஒருவர் திட்டம் வகுத்துள்ளார். ஆனால் இது குறித்து இரகசியத் தகவல் கிடைத்ததால், 23 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டார்.
குறித்த இளைஞரின் வீட்டை சோதனை செய்தபோது, அவரது வாகனத்தில் 3 கத்திகளும் மற்றும் ஆயுதங்கள் வாங்குவதற்கு இணையத்தளம்மூலமாக உதவி பெற முயன்றுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டது.(இ)

## செய்யது பீடி செய்த காரியம்

இந்தியாவில் பிரபலமான செய்யது பீடி நிறுவனம் பல கோடி ரூபா வருமான வரியைச் செலுத்தாமல் மறைத்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
செய்யது பீடி நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக முறையாக வருமான வரி செலுத்தவில்லை என்ற புகாரின் பேரில், அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான இடங்களில் கடந்த ஜூன் மாதம் 28, 29 ஆம் திகதிகளில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். தமிழகம் உட்பட 6 மாநிலங்களில் 63 இடங்களில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.
சோதனை குறித்து வருமான வரித்துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, "சுமார் 161 கோடிக்கு வரி செலுத்தாமல் ஏமாற்றியிருப்பதற்கான ஆவணங்கள் சிக்கியுள்ளன. கணக்குக் காட்டப்படாத 5 கோடி ரூபா பணமும் கைப்பற்றப் பட்டுள்ளது" என்றார்.(இ)

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்
# 14 பேர் பலி



ஈராக்கில் ஐ.எஸ் தற்கொலைதாரி ஒருவர் நடத்திய தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.
ஈராக்கின் அகதிமுகாம் ஒன்றில் இவ்வாறு தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
பெண் ஒருவரைப் போன்று தற்கொலை அங்கி அணிந்த தீவிரவாதியே இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளார். இந்த தாக்குதல் சம்பவத்தில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் அதிகமானவர்கள் பெண்களும் சிறுவர்களும் என்பது குறிப்பிடத்தக்கது. இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஈராக்கில் சுமார் 30 வீதமான மக்கள் உள்ளக இடம்பெயர்வுக்கு உள்ளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# ஜோடி போடும் கபாலி நடிகர்கள்



ரஜினி நடிப்பில் வெளிவந்த 'கபாலி' படத்தில் விஷாந்த், ரித்விகா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர்.

இந்நிலையில், இவர்கள் இருவரும் தற்போது ஒரு புதிய படத்தில் கதாநாயகன், கதாநாயகியாக மாறியிருக்கிறார்கள். இவர்கள் நடிக்கும் அந்தப் படத்தை ஜே.பி.ஆர். என்பவர் இயக்குகிறார். படத்துக்கு இன்னும் தலைப்பு வைக்கவில்லை.

இப்படத்தில் விஷாந்த் படித்து முடித்துவிட்டு வேலை தேடும் இளைஞனாக நடிக்கிறாராம். நாயகி ரித்விகா மிகப்பெரிய தொழிலதிபரின் மகளாக நடிக்கிறாராம்.(ஒ)




# தமிழ் சினிமாவை காப்பாற்றுங்கள்

இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகளின் இரட்டை வரி விதிப்பு முறையின் காரணமாக அதிகளவு வரியை எதிர்கொள்ளும் தமிழ் சினிமாவை காப்பாற்றுங்கள் என்று இயக்குநர் ஷங்கர், தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

குறித்த வரியை நீக்க வலியுறுத்தி தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் சார்பாக தமிழகம் முழுவதும் 1000 திரையரங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# 'வட்ஸ் அப்'பில் கூடுதல் வசதி



வாடிக்கையாளர்களைக் கவர 'வட்ஸ் அப்' அடிக்கடி புதிய மாற்றங்களைக் கொடுத்து வருகிறது.

இதன்வரிசையில் 'வட்ஸ் அப்'பில் ஏற்கனவே உள்ள எமோஜிகளை விட புதிய எமோஜிகள் அறிமுகமாகியுள்ளன.

மேலும், நாம் என்ன எமோஜி வேண்டும் என நினைக்கிறோமோ அதை ரைப் செய்தால் நமக்குத் தேவையான எமோஜிகளைத் தெரிவு செய்து கொள்ளும் வசதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாம் ரைப் செய்யும் எழுத்துக்களைத் தெரிவு செய்து Bold, Italic, Strikethrough உள்ளிட்ட வகையில் எழுத்துக்களை மாற்றும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ)



# சிறந்த நடிப்புக்கு விருது

தென்னிந்திய சர்வதேச திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில், சிறந்த நடிகருக்கான விருது சிவகார்த்திகேயனுக்கும், சிறந்த நடிகைக்கான விருது நயன்தாராவுக்கும் வழங்கப்பட்டன.

மேலும் சிறந்த பாடகருக்காக அனிருத், சிறந்த பாடலாசிரியர் மதன் கார்க்கி, சிறந்த எதிர்மறை கதாபாத்திரம் த்ரிஷா, இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான், சிறந்த பாடகி சித்ரா, சிறந்த விமர்சனம் செய்யப்பட்ட நடிகர் மாதவன், வாழ்நாள் சாதனையாளர் எஸ்.பி பால சுப்பிரமணியம் உள்ளிட்ட பலருக்கு விருது வழங்கப்பட்டன. (ஒ)


# காசுக்காக ஆடுவோருக்கு ஏன் கொடுக்க வேண்டும் பரிசு?



ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத்தை வென்ற பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர்களுக்கு பரிசு அறிவித்த பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் முடிவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தாரிக் ஆஸாத் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், பாகிஸ்தான் வீரர்களுக்கு தலா 10 இலட்சம் ரூபா வீதமும், பயிற்சியாளர் உள்ளிட்டோருக்குத் தலா 5 லட்சம் ரூபா பரிசுத் தொகையை பிரதமர் நவாஸ் ஷெரீப் அறிவித்துள்ளார்.

இதன் மூலம் அரசுக்கு 21.5 கோடி ரூபா செலவு ஏற்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் அனைவரும் மாத ஊதியம் பெறுபவர்கள். பொதுமக்களின் வரிப்பணம் பொதுமக்கள் நலனுக்காகவே செலவிட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.





# வாவ்ரிங்கா அதிர்ச்சி!

நேற்று ஆரம்பித்த விம்பிள்டன் டெனிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நட்சத்திர வீரர் வாவ்ரிங்கா அதிர்ச்சித் தோல்வியடைந்தார். மற்ற வீரர்களான நடால், முர்ரே ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டங்களில் ஹாலேப், வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோரும் வெற்றிபெற்றுள்ளனர்.

இத்தொடரில் நடந்த முதல் சுற்று ஆட்டத்தில் மூன்று முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற சுவிட்ஸர்லாந்தின் வாவ்ரிங்காவும், ரஷ்யாவின் மெத்வதேவும் மோதினர். இப்போட்டியின் நடுவே திடீரென கீழே தவறி விழுந்து ஏற்பட்ட காயம் காரணமாக வாவ்ரிங்காவால் சரியாக விளையாட முடியவில்லை. இதைப் பயன்படுத்திக் கொண்ட மெத்வதேவ் 6-4, 3-6, 6-4, 6-1 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில், இங்கிலாந்தின் அண்டி முர்ரே, கஜகஸ்தானின் அலெக்சாண்டர் பப்லிக்கை 6-1, 6-4, 6-2 என்ற சுற்றுக் கணக்கில் எளிதாக வென்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு போட்டியில் ஸ்பெனின் ரபேல் நடால் 6-1, 6-3, 6-2 என்ற சுற்றுக் கணக்கில் அவுஸ்திரேலியாவின் ஜோன் மில்மேனை எளிதாக வீழ்த்தினார். இது நடாலின் 850ஆவது வெற்றியாகும்.

இதேவேளை நடைபெற்ற பெண்களுக்கான ஆட்டங்களில் 2ஆம் நிலை வீராங்கனையான ரொமானியாவின் சிமோனா ஹாலேப், 6-4, 6-1 என சுற்றுக் கணக்கில் நியூஸிலாந்தின் மரினா எராகோவிக்கை வீழ்த்தினார்.

10ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், 7-6, 6-4 என்ற சுற்றுக் கணக்கில் பெல்ஜியத்தின் எலிஸ் மெர்டென்ஸை வீழ்த்தினார். (ஐ)

## அரியாலை சன சமூக நிலை கரப்பந்தாட்டத் தொடர்:

# ஆவரங்கால் மத்தி, நாயன்மார்கட்டு பாரதி வெற்றி





அரியாலை சனசமூக நிலையத்தின் 68ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற போட்டிகளில் ஆவரங்கால் மத்தி, நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

முதலில் நடைபெற்ற போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் 25:23, 25:23 என்ற புள்ளிகளடிப்படையில் புத்தூர் மத்திய விளையாட்டுக்கழகத்தை வென்றது.

இதேவேளை நடைபெற்ற மற்றொரு போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் 25:13, 25:23 என்ற புள்ளிகளடிப்படையில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை வென்று அடுத்து சுற்றுக்கு முன்னேறியது. (ஐ-50)



## நல்லிணக்கம் முழுமை பெறவில்லை

இலங்கையில் இன்னமும் முழுமையான நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை என்று கிழக்கு மாகாண ஆளுநர் பதவியில் இருந்து விலகி- ஜனாதிபதியின் செயலராகப் பதவியேற்றுள்ள ஒஸ்ரின்பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடந்த பிரியாவிடை நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். "முழுமையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஒவ்வொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஜனா திபதியின் செயலராகப் பதவியேற்கவுள்ளதாக தகவல்கள் வெளியான பின்னர் சமூக ஊடகங்களில் என்மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது. புதிய பதவியை ஏற்றுக்கொள்ளவுள்ளதால், ஊட கங்களில் தொடுக்கப்படும் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்குமாறு எனது குடும்பத்தினரைக் கேட்டுக்கொண்டுள்ளேன்." என்றும் அவர் கூறியுள்ளார். (உ)

## மனைவியைத் தாக்கிய கணவன் தலைமறைவு

நானுஓயா - ஈஸ்டல் தோட்டத்தில், குடும்பத் தகராறு காரணமாக கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட பெண் ஒருவர், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த பெண்ணை அவரது கணவர் பிரதான வீதியோரத்தில் வைத்து தாக்கிய போது, நுவரெலியா பிரதேசத்தில் இருந்து வந்த லிந்துலை பொலிஸார் கண்டுள்ளனர். பொலிஸாரைக் கண்ட சந்தேக நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். காயமடைந்த பெண்ணை பொலிஸார் நுவ ரெலியா மாவட்ட வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர். (உ)

## இன்றைய கருத்தோவியம்



நன்றி - அத தெரண

## கைதான இளைஞர்கள் 10 இலட்சம் நஷ்டஈடு

மட்டக்களப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் இருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பில், அவர்களது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக இன்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதன்படி, பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தால் 10 இலட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட வேண்டும் என நீதியரசர்கள் தனது உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன், இதற்கு மேலதிகமாக, அப்போதைய மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.எஸ்.விக்ரமரத்ன, தனது சொந்த நிதியில் இருந்து மனுதாரர்களுக்கு 50,000 ரூபாவை இழப்பீடாக வழங்க வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். 2007ஆம் ஆண்டு ஒக்ரோ பர் 3ஆம் திகதி மட்டக்களப்பு பொலிஸாரால் தமிழ் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டதாக பொலிஸாரால் கூறப்பட்டது. ஆயினும்அவர்கள்காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ)

## அமெரிக்கத் தூதரகம் முன் சாரதிகள் போராட்டம்

இலங்கையில் அமெரிக்க குடிமக்கள்- குறிப்பாக பெண்கள், முச்சக்கர வண்டிகளில் பயணம் செய்வதை தவிர்க்குமாறு, அமெரிக்க தூதரகம் எச்சரித்திருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. கொழும்பில் அமெரிக்க குடிமக்களிடம் குறிப்பாக பெண்களிடம் முச்சக்கர வண்டி சாரதிகள் முறைகேடாக நடப்பதாக வந்துள்ள முறைப்பாடுகளை அடுத்து, பயண எச்சரிக்கையை விடுப்பதாக அமெரிக்க தூதரகம் அறிவித்தி ருந்தது இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பயண எச்ச ரிக்கையை விலக்கக் கோரியும், கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக, முச்சக்கர வண்டி சாரதிகள் போராட்டம் ஒன்றை நடத்தினர். (உ)

## பாதுகாப்புச் செயலர் பதவி விலகினார்



இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி விரைவில் தனது பதவியில் இருந்து இன்று விலகினார். ஜேர்மனிக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ள நிலையிலேயே அவர் பாதுகாப்புச் செயலர் பதவியில் இருந்து விலகினார் கருணாசேன ஹெட்டியாராச்சியை இலங்கையின் தூதுவராக ஏற்றுக் கொள்வதற்கு ஜேர்மனி இணங்கியுள்ளதுடன், உயர் பதவிகளுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் அவரது நியமனத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. (உ)

## 307 பில்லியன் பிராங்க் சுவிஸ் வங்கியில் பதுக்கல்

சுவிஸ் வங்கியில் இலங்கையர்களுக்கு சொந்தமான 307 மில்லியன் சுவிஸ் பிராங்க் பணம் இருப்பதாக அந்த நாட்டின் தேசிய வங்கியின் 2016ஆம் ஆண்டுக் கான புதிய அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சுவிஸ் வங்கியில் பணம் பதுக்கும் நாடுகள் பட்டியலில் இலங்கை 151வது இடத்தில் உள்ள அதேவேளை பிரித்தானியா முதலிடத்தில் உள்ளது. சுவிஸ் வங்கியில் இந்தியர்களால் பேணப் பட்டு வந்த கணக்குள் சில நிறுத்தப்பட் டுள்ளதுடன், இந்தப் பட்டியலில் இந்தியா 88 வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்தியா வின் அண்டை நாடுகளில் பங் களாதேஷ் 89 வது இடத்தையும், நேபாளம் 150 வது இடத்தையும், பூட்டான்282ஆவது இடத்தையும் பிடித்துள்ளதாக குறிப் பிடப்படுகின் றது. விருத்தியடைந்த நாடு களின் சுமார் 824 பில்லியன் சுவிஸ் பிராங் இருப்ப தாகவும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் 208 மில்லியன் சுவிஸ் பிராங்க் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

## புலனாய்வு விவகாரங்களை வெளியிட முடியாது




புலனாய்வு விவகாரங்கள் தொடர்பாக எந்தக் கருத்தையும் வெளியிட முடியாது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. விமானம் ஒன்றைக் கடத்தி, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல் நடத்த ஐ.எஸ் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக, அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தியை அடுத்து, பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து, அமெரிக்கத் தூதரகத்தின் கருத்தை அறிந்து கொள்வதற்கு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று முற்பட்ட போதே, புலனாய்வு விவகாரங்கள் தொடர்பாக எந்தக் கருத்தையும் வெளியிட முடியாது என்று அமெரிக்க தூதரக அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். அதே வேளை, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு ஐ.எஸ் தீவிர வாதிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவல்கள் எந்த அடிப்படையும் அற்றவை என்று அரசாங்க புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## வங்கிகளில் இலகு கடன்

வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட அரச சேவையாளர்களுக்கு விஷேட முற்பணக் கடன் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொது நிர்வாக அமைச்சு அது தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. அதன்படி நிரந்தர அரச சேவையாளர் ஒருவருக்கு அடிப்படை சம்பளத்தின் ஆறு மடங்கு தொகை வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட உள்ளது. இதற்காக சாட்சியாளர்கள் தேவையில்லை என்பதுடன், 36 தவ ணைகளுக்குள் கடன் தொகை திரும்பச் செலுத்தப்பட வேண்டும். தற்காலிக மற்றும் சாதாரண அரச சேவையாளர்களுக்கு மாதச் சம்ப ளத்தின் மூன்று மடங்கு தொகை, 18 தவணைகளில் செலுத்தி முடிக்கும்படி வட்டியில்லாமல் வழங்கப்பட உள்ளது. இவர்கள் ஒருவரை பிணையாக முன்னிறுத்த வேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சு கூறியுள்ளது. (உ)

## ஆயிரம் குடும்பங்களுக்கு காஸ் அடுப்பு, சிலிண்டர்



களுத்துறை மாவட்ட, மில்லேனிய பிரதேச செயலக பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு காஸ் அடுப்புகள் மற்றும் சிலின்டர்களை வழங்க லிட்ரோ காஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் அதன் ஆரம்ப நிகழ்வாக பாதிக்கப்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு காஸ் அடுப்பு மற்றும் சிலிண்டர்கள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் நேற்று முற்பகல் வழங்கப்பட்டன. (உ)


விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை



வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு: 021 300 4848, 077 657 5907 ethirolimedia@gmail.com


## நாளை நாளும் கோளும்

05.07.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 21ஆம் நாள்

ஏகாதசி பி.இ. 04.37 வரை | விசாகம் காலை 7.55 வரை | சித்தாமிர்தயோகம்

இராகுகாலம் 11.57-01.27 | சுபநேரம் 04.27-05.57 | எமகண்டம் 07.27-08.57

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீபுவனேஸ்வரி அம்மாள் தீர்த்தத் திருவிழா

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உதவி | நம்பிக்கை | ஆக்கம் | ஊக்கம் | நஷ்டம் | கௌரவம் | ஆதாயம் | பாராட்டு | கவலை | துன்பம் | ஜெயம் | சாந்தம் |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



### 1886.07.03

அமெரிக்காவின் அடையாளமாக விளங்கும் சுதந்திரதேவியின் சிலையை, பிரான்ஸ் மக்கள் அமெரிக்காவுக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

## சுகாதார அமைச்சு கோழிக்குஞ்சு விநியோகம்

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் 2017ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டில் வறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன. அமைச்சரின் வவுனியா அலுவலகத்தில் நேற்றைய தினம் தெரிவுசெய்யப்பட்ட 10 வறிய குடும்பங்களுக்கு நல்லின கோழிக்குஞ்சுகளும், கோழிவளர்ப்புக்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (உ)





## நாட்டில் தலைவர்கள் கூடிவிட்டார்கள்

தற்பொழுது நாட்டில் தலைவர்கள் கூடி விட்டார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பான சர்வதேசப் பிரகடனம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்திற்கு கூட்டு எதிர்க்கட்சி எதிர்ப்பை வெளியிடுவதாகத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இதனைத் தெரிவித்துள்ள அவர் வெளிநாட்டவருக்கு தேவையான வகையில் வழக்கு விசாரணை செய்து பயங்கரவாதத்தை இல்லா தொழித்த அரசியல் மற்றும் படைத் தரப்பினரை தண்டிக்க இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த சட்டத்திற்கு கூட்டு எதிர்க்கட்சி இணங்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இன்று அரசாங்கத்தில் அதிகளவான தலைவர்கள் இருக்கின்றார்கள் எனவும், இதனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தீர்மானத்தை எடுக்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## தடுமாறாத தமிழர்களுக்கு தலைமை ஏற்பது யார்?

"தடுமாறாத தமிழர்களுக்கு தலைமை ஏற்பது யார்" எனும் தொனிப் பொருளில் கருத்தாடல் நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் குறித்த கருத்துப் பகிர்வுறவாடல் இடம் பெறவுள்ளதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார். (உ-02)

## நிறுத்துங்கள்

நாடளாவிய ரீதியில், நாளைய தினம் தொழில் நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவகத்துக்கு (சைட்டம்) எதிர்ப்புத் தெரிவித்து, முன்னெடுக்கப்படவுள்ள பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தைக் கைவிடுமாறு, கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார். (உ)

## இன்றைய பதவியேற்பு



கிழக்கு ஆளுநர் ரோகித போகொல்லாகம



பாதுகாப்பு செயலர் கபில வைத்தியரத்ன



இராணுவத்தளபதி மகேஸ் சேனநாயக்க



ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

நாடாளுமன்றத்தில் நாளை சமர்ப்பிக்கப்படவுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பொறுப்புக்கூறும் சர்வதேச சாசனச் சட்ட வரைபுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு புறக்கோட்டையில் இன்று போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்தது. இந்தச் சட்டத்தின் மூலம் போரில் வெற்றியை ஈட்டித் தந்த படையினரை குற்றவாளிகளாக்க அரசு முனைவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ஆ)



### கூட்டு எதிர்க்கட்சி....
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் இன்றைய தினம் கூட உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

### கலவரத்துக்கு....
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அவரை விசாரணை செய்தனர்.

* 9 ஆவது சந்தேக நபர்(சுவிஸ்குமார்) வெள்ளவத்தையில் நிற்பதாகவும், அவரைக் கைது செய்து அறிக்கையை அனுப்புமாறும் கோரியபோது ஏன் அப்போது நீங்கள் அனுப்பவில்லை.

* சந்தேகநபரை நீங்கள் காப்பாற்ற முனைந்ததாகக் கூறப்படுகின்றது. உங்களுக்கும் அவருக்கும் என்ன தொடர்பு?

* உங்களுக்கு ஏன் 21 ஆம் திகதி இடாற்றம் வழங்கப்பட்டது?

* இவ்வளவு பிரச்சினைகள் நடைபெற்று, மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தபோது, 17 ஆம் திகதி இரவு வேறு ஒரு வழக்கு இருப்பதாகக் கூறி மகரமகவுக்கு செல்ல முற்பட்ட காரணம் என்ன?

- போன்ற கேள்விகளை எழுப்பிய நீதிமன்றம், சம்பவத்தில் அவர் நடந்துகொண்ட செயற்பாடுகள் குறித்து கடும் கண்டனம் வெளியிட்டதோடு அவரை எச்சரிக்கையும் செய்துள்ளது. (எ-01)

### புலி அச்சம்....
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முயற்சிகள், பொதுமக்களின் வாழ்வாதாரம் என்பவற்றைக் கவனத்தில் எடுத்து காணிகளை இராணுவம் விடுவித்து வருகிறது. காணிகளை விடுவிப்பதற்கு முன்னர், அந்தப் பகுதியில் ஏதாவது பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதா- விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சிக்கு சாத்தியம் உள்ளதா என பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்வோம். அது 100 வீதம் திருப்தியாக உள்ளது. விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி தொடர்பான எந்த அச்சுறுத்தலும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (எ)

### கொடிகாமத்தில்....
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

காலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

20 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை ஒன்றே காணப்படுவதாகவும், அது செயற்றிறனற்று இயங்குவதால் பல்வேறு இன்னல்களை அனுபவித்துவருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (எ-04)

### நெடுந்தீவுக்....
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்ட நிலையிலும் கூட இதுவரையில் எந்த நடவடிக்கைளும் எடுக்கப்படவில்லை.

குதிரை லாயத்திலுள்ள குதிரைகளுக்கு உரிய பராமரிப்பு இன்மையால் மேலும் பல குதிரைகள் உயிரிழந்து விடுமோ என்ற அச்சம் நிலவுகின்றது.

எனவே, குதிரைகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றினைச் சரியான முறையில் பராமரிப்பதற்கும் உரிய திணைக்களங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நெடுந்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஆ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 04.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.